# ரூ. 57,000 கோடியில் 10,000 மின்சாரப் பேருந்துகள்

## மத்திய அமைச்சரவை ஒப்புதல்

**புது தில்லி, ஆக.16:** இந்தியா முழுவதும் ரூ. 57,613 கோடியில் 10,000 மின்சாரப் பேருந்துகளை இயக்க வகை செய்யும் பிரதமரின் மின்சார பேருந்து சேவை திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை புதன்கிழமை ஒப்புதல் அளித்தது.

சுற்றுச்சூழல் மாசைக் குறைக்கும் வகையில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்துக்கு மத்திய அரசு தனது பங்காக ரூ.20,000 கோடியை வழங்க உள்ளது.

தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற பொருளாதார விவகாரத்துக்கான அமைச்சரவைக் குழு கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்குர் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களிடம் கூறியதாவது:

**169 நகரங்களில்...:** இந்தியா முழுவதும் 169 நகரங்களில் அரசு-தனியார் பங்களிப்பு திட்டத்தின் கீழ் 10,000 மின்சாரப் பேருந்துகள் பயன்பாட்டுக்கு அறிமுகம் செய்யப்படும். இந்தத் திட்டத்துக்கு ரூ. 57,613 கோடி செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் பங்காக ரூ. 20,000 கோடி வழங்கப்படும்.



தில்லியில் புதன்கிழமை செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த மத்திய அமைச்சர்கள் அஸ்வினி வைஷ்ணவ், அனுராக் தாக்குர்.

**55,000 நேரடி வேலைவாய்ப்புகள்:** 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, யூனியன் பிரதேசங்கள், வடகிழக்கு பிராந்தியம் மற்றும் மலைப் பிரதேச மாநிலங்கள் உள்ளிட்ட 3 லட்சம் மற்றும் அதற்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட நகரங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்; மேலும், போதிய பேருந்து சேவை இல்லாத நகரங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இந்தத் திட்டத்தின் மூலம் 45,000 முதல் 55,000 நேரடி வேலைவாய்ப்புகள் உருவாகும்.

**ரயில்வேயில் 7 பன்முக வழித்தட திட்டம்:** இந்திய ரயில்வேயில் ரூ. 32,500 கோடியில் மொத்தம் 2,339 கி.மீ. தொலைவுக்கு 7 பன்முக வழித்தட திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

உத்தரப் பிரதேசம், பிகார், தெலங்கானா, ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம், குஜராத், ஒடிஸா, ஜார்க்கண்ட், மேற்கு வங்கம் என ஒன்பது மாநிலங்களில் உள்ள 35 மாவட்டங்கள், இந்தத் திட்டத்தின் கீழ் பலன் அடையும். போக்குவரத்தை எளிதாக்கவும், நெரிசலைக் குறைக்கும் வகையிலும் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

**எண்ம இந்தியா திட்ட விரிவாக்கம்:** எண்ம இந்தியா திட்ட விரிவாக்கத்துக்கு ரூ.14,903 கோடி ஒதுக்கிடு செய்யவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் 5.25 லட்சம் தகவல் தொழில்நுட்ப நிபுணர்களுக்கு மறுதிறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும் என்பதுடன், 2.65 லட்சம் பேருக்கு தகவல் தொழில்நுட்பத் துறையில் பயிற்சி அளிக்கப்படும் என்றனர்.

## விஸ்வகர்மா திட்டத்துக்கு ரூ.13,000 கோடி

**புது தில்லி, ஆக.16:** பிரதமரின் விஸ்வகர்மா கௌசல் சம்மான் திட்டத்துக்கு ரூ. 13,000 கோடி ஒதுக்கீடு செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தத் திட்டம் விஸ்வகர்மா ஜெயந்தி கொண்டாடப்படும் வரும் செப். 17-ஆம் தேதி தொடங்கப்படும் என சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

இந்தத் திட்டத்தின்மூலம் பொற்கொல்லர்கள், கொல்லர்கள், தச்சர்கள், சிற்பிகள், நெசவாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்தும் தொழிலாளர்கள் உள்ளிட்ட 18 தொழில் பிரிவினர், அவர்களின் குடும்பத்தினர் உள்பட 30 லட்சம் பேர் பலன் அடைய உள்ளனர். பயனாளிகளுக்கு சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை வழங்கப்படுவதுடன், தவணை முறையில் கடனுதவி வழங்கப்படும். 5 சதவீத சலுகை வட்டியில் முதல்கட்டமாக ரூ. 1 லட்சமும், இரண்டாம் கட்டமாக ரூ. 2 லட்சமும் தொழில் மேம்பாட்டுக்கான கடனுதவி வழங்கப்படும். திறன் மேம்பாட்டு பயிற்சி, உபகரண ஊக்கத்தொகை, எண்ம பரிவர்த்தனைகளுக்கான ஊக்கத்தொகை, சந்தைப்படுத்துதல் உதவி ஆகியவையும் வழங்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

## கைவினை தொழிலாளர்களை கொண்டாடும்



**புது தில்லி, ஆக.16:** 'பிரதமரின் விஸ்வகர்மா' திட்டம், பாரம்பரிய கைவினை தொழிலாளர்களைக் கொண்டாடும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இதுகுறித்து பிரதமர் மோடி 'எக்ஸ்' (ட்விட்டர்) வலைதளத்தில் புதன்கிழமை வெளியிட்ட பதிவில், 'நாட்டு மக்களின் திறமைகள் மற்றும் கலாசார பன்முகத்தன்மையை உள்ளடக்கி, கிராம மற்றும் நகர்ப்புறங்களில் பாரம்பரிய கைவினை தொழிலாளர்களை இந்தத் திட்டம் கொண்டாடும்.

காலத்தால் அழியாத குரு-சிஷ்ய பாரம்பரியத்துக்கு மதிப்பளித்து, நமது 'விஸ்வகர்மா'-க்களின் முயற்சிகளுக்கு வலுசேர்ப்பதோடு, நவீன மதிப்பு சங்கிலிகளுடன் அவர்களை இணைக்கும். அவர்களின் ஒப்பற்ற திறமைகளை வரும் தலைமுறைகளுக்கும் பாதுகாக்கும்' என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

EVA STALIN IAS

# சந்திரயான் 3 லேண்டர் இன்று விடுவிப்பு


**சென்னை, ஆக.16:** நிலவுக்கு மிக நெருக்கமான, இறுதிக் கட்ட சுற்றுப் பாதையில் வலம் வரும் சந்திரயான்-3 விண்கலத்திலிருந்து லேண்டர் கலன் வியாழக்கிழமை (ஆக.17) விடுவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலை இஸ்ரோ தெரிவித்துள்ளது. சந்திரயான்-3 விண்கலத்திலிருந்து லேண்டர் கலன் விடுவிக்கும் பணி வெற்றிகரமாக நிறைவடைந்த பிறகு, லேண்டரின் வேகம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு, நிலவில் வரும் 23-ஆம் தேதி தரையிறக்கப்படவுள்ளது.

முன்னதாக, நிலவுக்கு நெருக்கமான இறுதிக்கட்ட சுற்றுப் பாதைக்குள் சந்திரயான்-3 விண்கலம் புதன்கிழமை வெற்றிகரமாக செலுத்தப்பட்டதாக இஸ்ரோ அறிவித்தது.

நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்த சந்திரயான்-3 விண்கலம் எல்விஎம்-3 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து கடந்த ஜூலை 14-ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது.

பூமியைச் சுற்றிவந்த விண்கலத்தின் சுற்றுப்பாதை தொலைவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டது. தொடர்ந்து ஆக. 1-ஆம் தேதி புவியீர்ப்பு விசையிலிருந்து சந்திரயான்-3 விலக்கப்பட்டு நிலவை நோக்கிச் செல்லும்படி



சந்திரயான் 3 விண்கலம் எடுத்து அனுப்பிய நிலவின் படம்.



பூமியில் இருந்து நிலவுக்கு சந்திரயான்-3 கடந்து வந்த சுற்றுவட்டப் பாதை.

அதன் பயணப் பாதை மாற்றப்பட்டது. அதன்படி, வலம் வரும் சந்திரயான்-3 விண்கலத்தின் சுற்றுவட்டப் பாதையின் தொலைவை குறைத்து, நிலவில் மெதுவாக தரையிறக்குவதற்கான பணிகளில் இஸ்ரோ விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். அதற்காக சந்திரயான்-3 சுற்றுவட்டப் பாதை இது வரை 3 முறை மாற்றப்பட்டது.

**இறுதிக்கட்ட சுற்றுப் பாதையில்...:** இந்த நிலையில், நிலவையொட்டிய இறுதிக்கட்ட சுற்றுப் பாதையில் சந்திரயான்-3-ஐ கொண்டு செல்லும் பணிகள் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, விண்கலத்தில் இருந்த திரவ வாயு இயந்திரம் இயக்கப்பட்டு வெற்றிகரமாக அதன் சுற்றுவட்டப்பாதை மாற்றியமைக்கப்பட்டது.

தற்போது நிலவின் தரைப் பகுதியிலிருந்து குறைந்தபட்சம் 153 கி.மீ. தொலைவும், அதிகபட்சம் 163 கி.மீ. தொலைவும் கொண்ட சுற்றுவட்டப் பாதையில் விண்கலம் நிலவைச் சுற்றி வருகிறது.

அடுத்ததாக சந்திரயான்-3 விண்கலத்திலிருந்து லேண்டரை விடுவித்து நிலவில் தரையிறக்குவதற்கான பணிகள் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட உள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. முன்னதாக, நிலவை சந்திரயான்-3 எடுத்த புகைப்படத்தை இஸ்ரோ வெளியிட்டது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, ஆக. 16:** மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்பு மூலம் ஊராட்சிகள், பேரூராட்சி தொடக்கப் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். மேலும், ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும், சுய உதவிக் குழுக்களின் 'மதி தினை உணவகங்கள்' ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

மத்திய அரசின் நிதியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களின் வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குறித்த குழுவின், மூன்றாவது கூட்டம் தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அவர் பேசியதாவது:

தமிழகத்தில் மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன கட்டமைப்புக்காக, நிகழ் நிதியாண்டில் 10 ஆயிரம் சுய உதவிக் குழுக்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவற்றுக்குச் சுழல் நிதியாக போதுமான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், பண்ணை வாழ்வாதார நடவடிக்கைப் பணிகள் ஆகியவற்றுக்கும் போதிய நிதிகள் ஒதுக்கப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



சுய உதவிக் குழுக்களுக்கு கடந்த இரு ஆண்டுகளில் மட்டும் ரூ.45 ஆயிரம் கோடி அளவுக்கு கடன்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதையும் தாண்டி ரூ.47 ஆயிரத்து 34 கோடி வழங்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

**வாங்குவோர் – விற்போர் சந்திப்பு:** சுய உதவிக் குழுக்களை ஊக்குவிப்பதுடன் மட்டுமின்றி, அவர்கள் தயாரிக்கும் பொருள்களை விற்பனை செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சுய உதவிக் குழுக்களின் பொருள்களை விற்பனை செய்ய ஏதுவாக, 'மதி சந்தை' என்ற இணையவழி விற்பனை தளம் உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருள்களை அவர்களுக்குள்ளாகவும், பிற பெரும் வணிக நிறுவனங்கள் மூலமாகவும் விற்பனை செய்ய, மாநில மற்றும் மாவட்ட அளவில் வாங்குவோர் – விற்போர் சந்திப்பு நடத்தப்படும்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் முக்கிய சுற்றுலாத் தலங்களில் 'மதி அங்காடிகள்' நிறுவப்படும். சிறப்பு உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக, 'மதி எக்ஸ்பிரஸ் வாகனங்கள்' வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், சுய உதவிக் குழுக்களின் 'மதி தினை உணவகங்கள்' ஏற்படுத்தப்படவுள்ளன.

**காலை உணவுத் திட்டம்:** முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நிகழாண்டில் விரிவாக்கம் செய்யப்படவுள்ளது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு காலை உணவுத் திட்டம் குறித்து பயிற்றுவிக்கப்படும். அவர்களது பங்கேற்பின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள தொடக்கப் பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

'எல்லோருக்கும் எல்லாம்' என்ற திராவிட மாடல் ஆட்சியில் அனைத்து மக்களுக்கும் நன்மை தரும் திட்டங்களை சிறிதும் தாமதமின்றி செயல்படுத்தி, திட்டங்களின் பயன் முழுமையாக மக்களுக்குச் சென்றடைய வேண்டும். இதற்கு துறைத் தலைவர்களும், அரசு அலுவலர்களும் முழுமனதுடன் செயல்பட வேண்டும் என்றார் அவர்.

இந்தக் கூட்டத்தில், அமைச்சர்கள் கே.என்.நேரு, இ.பெரியசாமி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், உதயநிதி ஸ்டாலின், மா.சுப்பிரமணியன், எம்.பி.,க்கள் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், ஆ.ராசா, சு.திருநாவுக்கரசர், தொல்.திருமாவளவன், கே.நவாஸ்கனி, எம்.எல்.ஏ.,க்கள் வி.ஜி.ராஜேந்திரன், நா.எழிலன், அசன் மௌலானா, கே.ஏ.செங்கோட்டையன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா உள்ளிட்ட பலர் பங்கேற்று கருத்துகளைத் தெரிவித்தனர்.

EVA STALIN IAS

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# போர்ப் பயிற்சியும் பொருளாதார வளர்ச்சியும்!



கோதை ஜோதிலட்சுமி

**தைவான், சீனாவின் ஒரு பகுதி என்று சீனா தொடர்ந்து உரிமை கொண்டாடி வருகிறது. தைவானுக்கு உதவி செய்ய அமெரிக்கா தயாராக உள்ளது. தைவானுக்கும் சீனாவுக்கும் இடையில் போர் மூளுமேயானால், அது இந்தியாவின் கிழக்கு நோக்கிய வர்த்தகத்திற்குப் பெரும் பாதிப்பாக அமையும்.**

# இந்திய ராணுவத்துக்கான 'அப்பாச்சி' ஹெலிகாப்டர்: உற்பத்தியை தொடங்கிய அமெரிக்க போயிங் நிறுவனம்

**புது தில்லி, ஆக.16:** இந்திய ராணுவத்துக்கான 'ஏஹெச்-64இ' அப்பாச்சி போர் ஹெலிகாப்டரை தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டிருப்பதாக அமெரிக்காவின் மிகப்பெரிய விமான தயாரிப்பு நிறுவனமான போயிங் புதன்கிழமை தெரிவித்தது.

கடந்த 2020-ஆம் ஆண்டு இந்திய விமானப் படைக்கு '22 இ ரக அப்பாச்சி ஹெலிகாப்டரை தயாரித்து வழங்கும் பணியை போயிங் நிறுவனம் நிறைவு செய்த நிலையில், புதிதாக இந்திய ராணுவத்துக்கு 'ஏஹெச்-64இ' ரக 6 அப்பாச்சி ஹெலிகாப்டர்களை தயாரித்து வழங்குவதற்கான ரூ. 4,168 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தை அந்த நிறுவனத்துடன் இந்தியா மேற்கொண்டது. ஒப்பந்தப்படி, இந்த ஹெலிகாப்டர்கள் தயாரிப்புப் பணியை நிறைவுசெய்து 2024-ஆம் ஆண்டு முதல் இந்திய ராணுவத்திடம் போயிங் நிறுவனம் ஒப்படைக்க வேண்டும். அந்த வகையில், தயாரிப்புப் பணிகளை அந்த நிறுவனம் தற்போது தொடங்கியுள்ளது.

இதுகுறித்து போயிங் நிறுவனம் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'இந்திய ராணுவத்துக்கான 'ஏஹெச்-64இ' அப்பாச்சி ஹெலிகாப்டர் தயாரிப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த ஹெலிகாப்டரில் வீரர்கள் அமர்ந்து செல்லும் நடுப்பகுதி, டாடா போயிங் ஏரோஸ்பேஸ் நிறுவனம் (டிபிஏஎல்) ஹைதராபா



தில் உள்ள நவீன தயாரிப்பு மையத்தில் தயாரிக்கப்பட்டு இந்த ஆண்டு தொடக்கத்தில் ஒப்படைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, அமெரிக்காவின் அரிசோனாவின் மெஸா பகுதியில் அமைந்துள்ள போயிங் விமான தயாரிப்பு மையத்தில் இந்த ஹெலிகாப்டர் தயாரிப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன' என்று தெரிவித்துள்ளது.

இதுகுறித்து போயிங்-இந்தியா நிறுவனத் தலைவர் சலில் குப்தா கூறுகையில், 'நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய ஏஹெச்-64 ஹெலிகாப்டர், இந்திய ராணுவத்தின் போர்த் திறனை வலுப்படுத்தும் என்பதோடு, செயல்பாட்டுத் தயார் நிலையையும் மேம்படுத்த உதவும்' என்றார்.

**சிறப்பு என்ன?** உலகின் முன்னணியில் இருக்கும் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய போர் ஹெலிகாப்டராக 'ஏஹெச்-64இ' கருதப்படுகிறது. பகலில் மட்டுமின்றி இரவிலும் இந்த ஹெலிகாப்டரை இயக்க முடியும் என்பதோடு, ரேடார் தொழில்நுட்ப உதவியுடன் இலக்குகளை மிகத் துல்லியமாக தாக்கி அழிக்கும் திறன் கொண்டது.

5,352 கிலோ எடை கொண்ட இந்த ஹெலிகாப்டர் 49.11 அடி நீளமும், 17.16 அடி அகலமும், 16.24 அடி உயரமும் உடையதாகும்.

தலா 45 கிலோ எடையுடைய 16 ஏஜிஎம் ரக ஏவுகணைகள் மற்றும் அதனை ஏவுவதற்கான ராக்கெட் கருவியை இதில் எடுத்துச் செல்ல முடியும் என்பதோடு, நிமிஷத்துக்கு 625 முறை சுடும் திறன் கொண்ட செயின் தோட்டாக்களுடன் இணைக்கப்பட்ட 30 மி.மீ. துப்பாக்கியும் இதில் இடம்பெற்றிருக்கும்.

இந்த ஹெலிகாப்டரை இயக்கியவுடன் ஒரே நிமிஷத்தில் 2,415 அடி உயரத்துக்கு செல்ல முடியும் என்பதோடு, அதிகபட்சமாக 9,478 அடி உயரம் வரை சென்று பறக்க முடியும்.

ஒரு முறை நிரப்பப்பட்ட எரிபொருளுடன் 1,900 கி.மீ. தூரம் பறக்கும் திறன் கொண்டது 'ஏஹெச்-64இ' அப்பாச்சி ஹெலிகாப்டர்.

**எந்தெந்த நாடுகளிடம் உள்ளது?** அமெரிக்க ராணுவத்தில் இந்த ஹெலிகாப்டர் மிக முக்கிய பங்கு வகித்து வருகிறது. இந்தியாவைத் தவிர எகிப்து, கிரீஸ், இந்தோனேசியா, இஸ்ரேல், ஜப்பான், கொரியா, குவைத், நெதர்லாந்து, கத்தார், சவூதி அரேபியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் பிரிட்டன் நாடுகள் அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் உள்ளன.

# எண்ம தனிநபர் தரவு பாதுகாப்பு சட்டம் ஒரு பார்வை!

நவீன தொழில்நுட்பங்கள் வளர்ந்து வரும் நிலையில், தனிநபரின் தரவுகளானது 'நவீன யுகத்தின் தங்கமாக' மாறியுள்ளது. தொழில்நுட்ப நிறுவனங்கள் தனிநபரின் தரவுகளைப் பல்வேறு காரணங்களுக்காகப் பெற்று பயன்படுத்தி வருகின்றன. அத்தரவுகளானது தனிநபரின் உரிமைகள் சார்ந்த விவகாரம் என்பதால் அவற்றைப் பாதுகாப்பது அரசின் கடமையாக மாறியுள்ளது.

அதைக் கருத்தில்கொண்டு மத்திய அரசு இயற்றிய தனிநபர் தரவுப் பாதுகாப்பு மசோதாவுக்கு மழைக்கால கூட்டத்தொடரின் போது நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியது. அந்த மசோதா தற்போது குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் பெற்று சட்டமாக உருவெடுத்துள்ளது.

அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள்:

### இந்திய தரவுப் பாதுகாப்பு வாரியம்

தனிநபரின் தரவுகளை நிறுவனங்கள் பெறுவது, அவற்றைப் பயன்படுத்துவது, குறைதீர் விவகாரங்கள், கண்காணிப்பு, அபராதம் விதிப்பது உள்ளிட்டவற்றை மேற்கொள்வதற்காக இந்தியத் தரவுப் பாதுகாப்பு வாரியத்தை உருவாக்க சட்டம் வழிவகை செய்கிறது.

### யாருக்கெல்லாம் பொருந்தும்?

எண்ம வழியில் பெறப்படும் தனிநபர்களின் தரவுகள், அவற்றைப் பெறும் நிறுவனங்கள், நேரடியாகப் பெறப்பட்டு எண்மமயமாக்கப்படும் தரவுகள், இந்தியாவுக்கு வெளியே நிர்வகிக்கப்படும் இந்தியரின் தரவுகள் உள்ளிட்டவற்றுக்கு இந்தச் சட்டம் பொருந்தும். தனிப்பட்ட தரவுகளை சமூக வலைதளங்கள் உள்ளிட்டவற்றில் அனைவருக்கும் தெரியும்படி பொதுவெளியில் வெளியிட்டால், அத்தகைய தரவுகளுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது.

### ஒப்புதல் அவசியம்

குறிப்பிட்ட நிறுவனங்கள் செயலி வாயிலாகவோ, வலைதளம் மூலமாகவோ தனிப்பட்ட தரவுகளைக் கோரும்போது, அவற்றின் பயன்பாடு குறித்த விவரங்கள் பயனாளர்களுக்குத் தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும். அத்தரவுகளைக் குறிப்பிட்ட விவகாரங்களுக்குப் பயன்படுத்துவதற்கான அனுமதியையும் பயனாளர்களிடம் அந்நிறுவனங்கள்



பெற வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்பட்ட விவகாரங்களுக்கு மட்டுமே சேகரிக்கப்பட்ட தரவுகளைப் பயன்படுத்த வேண்டும். அது தவிர மற்ற விவகாரங்களுக்கு அத்தரவுகளைப் பயன்படுத்த வேண்டுமானால், அதற்கெனத் தனியாக சம்பந்தப்பட்ட பயனாளர்களிடம் அனுமதி பெற வேண்டும். தரவுகளைப் பயன்படுத்த நிறுவனங்களுக்கு வழங்கிய அனுமதியைப் பயனாளர்கள் எந்த நேரத்திலும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

### சிறார்களின் தரவுகள்

18 வயதுக்குக் குறைவான சிறார்களின் தரவுகளைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை அவர்களின் பெற்றோரிடம் இருந்து நிறுவனங்கள் பெற வேண்டும். சிறார்களை மையப்படுத்தி விளம்பரங்களை வழங்குவதற்காக அவர்களது தனிப்பட்ட தரவுகளையும், இணையத்தில் அவர்களது நடவடிக்கைகளையும் நோட்டமிட நிறுவனங்களுக்குத் தடை விதிக்கப்படுகிறது.

### நிறுவனங்களின் பொறுப்பு

குறிப்பிட்ட விவகாரத்துக்குப் பெறப்படும் தரவுகளின் பயன்பாடு நிறைவடைந்தவுடன் அத்தரவுகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அழித்துவிட வேண்டும். தரவுகளைப் பயன்படுத்த வழங்கிய அனுமதியைத் தனிநபர்கள் திரும்பப் பெறும் சமயத்திலும் அவர்கள் சார்ந்த தரவுகள் உடனடியாக அழிக்கப்பட வேண்டும்.

சேகரிக்கப்பட்ட தனிநபர்களின் தரவுகளைப் பாதுகாக்க வேண்டியது நிறுவனங்களின் பொறுப்பு. அத்தரவுகள் ஒருவேளை திருடப்பட்டால் அதுதொடர்பாக இந்தியத் தரவுப் பாதுகாப்பு வாரியத்துக்கும் சம்பந்தப்பட்ட தனிநபர்களுக்கும் உடனடியாகத் தெரியப்படுத்த வேண்டும். தரவு சேகரிப்பு தொடர்பான குறைதீர் வசதிகளையும் பயனாளர்களுக்கு நிறுவனங்கள் வழங்க வேண்டும்.

### தனிநபர்களின் பொறுப்பு

சேகரிக்கப்பட்ட தரவுகளின் விவரங்கள், அவை பயன்படுத்தப்பட்ட விவரங்கள், யாருக்கெல்லாம் பகிரப்பட்டன உள்ளிட்ட தகவல்களை நிறுவனங்களிடம் இருந்து தனிநபர்கள் பெற்றுக்கொள்ளலாம். சேகரிக்கப்பட்ட தரவுகளை நீக்கவோ, மாற்றங்களை மேற்கொள்ளவோ தனிநபர்கள் முறையிடலாம். அதே வேளையில், மற்ற நபர்களின் தரவுகளை வழங்குவது, போலியான புகாரை நிறுவனங்கள் மீது முன்வைப்பது உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபடுவோருக்கு ரூ.10,000 வரை அபராதம் விதிக்கப்படும்.

### அரசின் அதிகாரங்கள்

குறிப்பிட்ட பயன்பாட்டுக்காகத் தனிநபர்களின் தரவுகளை வெளிநாடுகளுக்கும் நிறுவனங்கள் பகிர்ந்து கொள்ளலாம். ஆனால், பாதுகாப்பு, இறையாண்மை காரணமாகத் தடை விதிக்கப்பட்ட நாடுகளுக்கு அத்தகைய தரவுகளை நிறுவனங்களால் பகிர முடியாது. அத்தகைய நாடுகளின் விவரங்களை மத்திய அரசு அவ்வப்போது தெரிவிக்கும். இந்தியத் தரவுப் பாதுகாப்பு வாரியத்தின் பரிந்துரையை ஏற்று குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு மத்திய அரசு தடை விதிக்கலாம். சமூக வலைதளங்களில் பதிவிடப்பட்டுள்ள கருத்துகளை நீக்க சம்பந்தப்பட்ட நிறுவனங்களை வலியுறுத்தும் அதிகாரத்தையும் இச்சட்டம் மத்திய அரசுக்கு வழங்குகிறது.

### விலக்குகள்

குற்ற வழக்குகளின் விசாரணை, நிதிசார் முறைகேடுகள் தொடர்பான விசாரணை உள்ளிட்டவற்றின்போது சில தனிநபர்களின் தரவுகளை நிறுவனங்களிடம் இருந்து மத்திய அரசு கோரலாம். அதற்காக, தரவுப் பாதுகாப்பு சட்டத்தில் இருந்து மத்திய அரசுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இறையாண்மை, நாட்டின் பாதுகாப்பு, பொது அமைதியைப் பாதுகாத்தல் உள்ளிட்ட விவகாரங்களிலும் மத்திய அரசுக்கு இச்சட்டத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### அபராதம்

சேகரிக்கப்பட்ட தரவுகளை முறையாகப் பாதுகாக்காத நிறுவனங்களுக்கு ரூ.250 கோடி வரை அபராதம் விதிக்கப்படும். தரவுத் திருட்டு குறித்து தரவுப் பாதுகாப்பு வாரியத்திடமும், சம்பந்தப்பட்ட தனிநபரிடமும் தெரிவிக்கப்படவில்லை எனில் நிறுவனத்துக்கு ரூ.200 கோடி வரை அபராதம் விதிக்கப்படும். சிறார் தொடர்பான தரவுகளின் பாதுகாப்பை உறுதி செய்யவில்லை எனில் ரூ.200 கோடி வரை அபராதம் விதிக்கப்படும்.

# சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம்: முதல்வரிடம் காவல் துறையினர் வாழ்த்து

**சென்னை, ஆக.16:** சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்ற காவல் துறையைச் சேர்ந்தவீரர்கள், தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

காவல் மற்றும் தீயணைப்புத் துறையினருக்கான சர்வதேச விளையாட்டுப் போட்டிகள், கனடா நாட்டின் வின்னிபெக் நகரில் ஜூலை 27-இல் தொடங்கி கடந்த 6-ஆம் தேதி வரை நடைபெற்றது. இந்தப் போட்டிகளில் சுமார் 50 நாடுகளில் இருந்து 8,500-க்கும் அதிகமான காவல் மற்றும் தீயணைப்புத் துறை வீரர்கள் பங்கேற்றனர். இதில், தமிழ்நாடு காவல் துறை தடகள அணியைச் சேர்ந்த காவல் கண்காணிப்பாளர் ஏ.மயில்வாகனன், காவல் ஆய்வாளர்கள் உட்பட 15 பேர் பல்வேறு



கனடா நாட்டின் வின்னிபெக்கு நகரில் நடைபெற்ற காவல்துறை மற்றும் தீயணைப்புத் துறையினருக்கான சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்று, சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை புதன்கிழமை சந்தித்து வாழ்த்து பெற்ற தமிழ்நாடு காவல் துறை அணியினர். உடன் தமிழக டிஜிபி சங்கர் ஜிவால், ஏடிஜிபி (ஆயுதப்படை) எச்.எம்.ஜெயராம்.

போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றனர். அவர்கள் 15 தங்கம், 11 வெள்ளி மற்றும் 15 வெண்கலம் என மொத்தம் 41 பதக்கங்களை வென்றுள்ளனர்.

இதுவே, தமிழ்நாடு காவல் துறை தடகள அணி ஓராண்டில் வென்ற அதிகபட்ச பதக்கங்களாகும். வெற்றி பெற்ற 15 வீரர்களும் முதல்வர் மு.க.ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

மேலும், சர்வதேச விளையாட்டுப் போட்டியில், அகில இந்திய காவல் துறை விளையாட்டு கட்டுப்பாட்டு வாரியத்தால் இந்திய அணி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இந்த அணியில் தமிழகத்தைச் சேர்ந்த நான்கு காவலர்கள் இடம்பெற்றிருந்தனர். அவர்கள் 6 தங்கம் மற்றும் 7 வெள்ளிப் பதக்கங்கள் என மொத்தம் 13 பதக்கங்களை வென்றனர். அவர்களும் முதல்வர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

இந்நிகழ்வில், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல் துறை கூடுதல் இயக்குநர் (ஆயுதப்படை) எச்.எம்.ஜெயராம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# ஸ்ரீபெரும்புதூரில் விரைவில் இந்தியாவின் முதல் 'ட்ரோன்' பொது சோதனை மையம்



**சென்னை, ஆக. 16:** சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூரில் விரைவில் ட்ரோன்களுக்கான பொது சோதனை மையம் அமைக்கப்பட உள்ளது என தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

இது குறித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழகத்தில் ஆளில்லா விமானம் தயாரிக்கும் தொழில் நிறுவனங்களானது, மோட்டார்கள், பேட்டரி உள்ளிட்ட பல்வேறு பாகங்களை தனித்தனி மையங்களில் சோதனை செய்து வருகின்றன. இது செலவினத்தை அதிகரிப்பதுடன், சோதனைகளை மேற்கொள்ள காலதாமதமும் ஆகிறது. இந்த இடர்பாடுகளைக் களையும் நோக்கத்துடன், மத்திய அரசின் பாதுகாப்பு உட்கட்டமைப்பு சோதனைத் திட்டத்தின் கீழ், இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த ட்ரோன் சோதனை மையத்தை அமைக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) திட்டமிட்டுள்ளது.

மத்திய அரசின் மானியத்துடன் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த டிட்கோ ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரியது. அதன்படி, கெல்டிரான், சென்ஸ் இமேஜ், ஸ்டாண்டர்டு டெஸ்டிங் அன்ட் காம்ப்ளையன்ஸ், அவிக்ஷா ரீடெய்லர்ஸ் ஆகிய 4 நிறுவனங்கள் டிட்கோவுடன் இணைந்து ரூ.45 கோடி மதிப்பில் ட்ரோன் சோதனை மையத்தை அமைக்கவுள்ளன.

இந்தச் சோதனை மையம், ஆளில்லா விமானத்தின் ஆராய்ச்சி, வடிவமைப்பு, மேம்பாடு, உற்பத்தி மற்றும் சோதனைகளுக்குத் தேவையான பல்வேறு வசதிகளை ஒரே இடத்திலேயே சர்வதேச தரத்தில் வழங்கும்.

சோதனை மையமானது, ஸ்ரீபெரும்புதூர் அருகே வல்லம் வடகாலில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் சுமார் 2.3 ஏக்கர் பரப்பில் அமைக்கப்படவுள்ளது. இதன்மூலம், இந்தியாவின் முதல் ட்ரோன் விமான சோதனை மையம் என்ற பெருமையை வல்லம் வடகாலில் அமையவுள்ள மையம் பெறவுள்ளது.

இதன்மூலம், வான்வெளி மற்றும் பாதுகாப்பு நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளைத் தொடங்குவதற்கு விருப்பமான இடமாக தமிழ்நாட்டை மாற்ற இந்தச் சோதனை மையம் உதவும் என்று அவர் தெரிவித்தார்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**